# ஏழுமுறை அவர் கூறும் ஐயோவும் எருசலேமைக் குறித்த அவருடைய புலம்பலும்

## (23:13-39)

தேவாலயத்தில் அவர் திறந்தவெளி பிரசங்கம் செய்து கொண்டிருந்த இந்த நேரத்தில், இயேசு ஒரு வரிசையான “ஐயோ” என்ற வார்த்தைகளை அவரைப் புறந்தள்ளி ஜனங்களை தவறான திசைக்கு கொண்டு சென்ற யூதமதத் தலைவர்களின் மீது கூறுகிறார். “ஐயோ” என்ற கிரேக்க வார்த்தை (*ouai*) எபிரெய பதத்திற்கு *hoy* சமமானது, தீர்க்கதரிசிகள் இதை அடிக்கடிப் பயன்படுத்தியிருக்கின்றனர் (ஏசாயா 5:8-23; ஆபகூக் 2:6-19). இதன் பொருள் துக்கம், வலி, கோபாக்கினை, வருத்தம், சஞ்சலம் அல்லது ஒருவர் தனது உயிரைக் கூட விட வேண்டிய ஆக்கினையைக் குறிக்கும். மேக் ஆர்தர், ஜூனியர், இது “சாதாரண பொருள் கொள்ளும் ஒரு வார்த்தையாக பெரும்பாலும் எடுத்துக் கொள்ள முடியாது, உச்சரிப்பும் பொருளும் ஏறத்தாழ ஒரே மாதிரியானதாக திடீர் என்று சொல்லுகிறவார்த்தையல்ல,”[1] என்று எழுதினார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், அது ஒரு அதிரடியாக, எண்ண வெளியீட்டின் வார்த்தை, இயேசு தமது ஊழிய காலத்தில் வேறு இடங்களில் பலமுறை “ஐயோ” எனும் பதத்தை பயன்படுத்தியுள்ளார் (11:21; 18:7; 24:19; 26:24). “பாக்கியவான்” (ஆசீர்வதிக்கப் பட்டவன்) என்பதற்கு எதிர்ச்சொல் “ஐயோ” (லூக்கா 6:17-26).

இந்த நிகழ்ச்சியில் இயேசு பயன்படுத்தியுள்ள ஐயோ என்று குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை கேள்விக்குரியது. KJV மொழிபெயர்ப்பில் எட்டு முறை ஐயோ எனும் வார்த்தை சொல்லப்பட்டுள்ளது. NASB, மொழிபெயர்ப்பிலும் எட்டுமுறை ஐயோ எனும் பதம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது, இதில் ஒன்று 14 வது வசனத்தில் அடைப்புக்குறிக்குள் இடம் பெற்றுள்ளது. NIV, மொழிபெயர்ப்பில் ஏழு முறை வரிசைப்படுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் வசனம் 14 கீழ் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சமீபத்திய மொழிபெயர்ப்புகளில் இந்த வசனத்தை இப்படி நடத்தக் காரணம் ஆரம்ப பிரதிகளில் அது காணப்படவில்லை என்பதுதான். மேலும், இந்த வசனத்தைச் சேர்த்துள்ள மொழிபெயர்ப்புகள் 13 வது வசனத்துக்கு முன்போ பின்போ சேர்த்துள்ளனர். ஆதலால், சமீபத்திய பாட நூல் வல்லுனர்கள் இந்த வசனம் மாற்கு 12:40 அல்லது லூக்கா 20:47 க்கு சமமாக ஏவி வாங்கப்பட்டது என்று தர்க்கிக்கின்றனர், ஆகிலும் சொல்லப்படுபவை தர்க்க ரீதியற்றது.[2]

*பாடநூல் சாட்சியங்கள் ஏழுமுறை மட்டுமே "ஐயோ" எனும் வார்த்தை மத்தேயுவில் சொல்லப்பட்டதாக அனுகூலமான நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது, இது ஒரு முழுமையான எண்ணிக்கையைக் குறிக்கும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 5:1; 8:2; 10:3; 15:1; 16:1). வசனம் 14ல் சொல்லப்பட்டுள்ள சேர்க்கை மற்ற ஜனங்கள் மீது பரிசேயர்கள் கொண்டுள்ள செல்வாக்கை வசனங்கள் 13, 15ல் காணுகிற உரையாடலை உடைத்து சிதறக் கூடியதாயிருக்கிறது. ஒருவேளை எண்ணிக்கையுள்ள ஐயோ குறிப்பில் வசனம் 14 சேர்க்கப்படாவிட்டாலும், மற்ற ஏழோடு இதுவும் விவாதிக்கப்படுகிறது.*

## *முதல் ஐயோ (23:13, 14)*

***13மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதிலே பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை,***

***14மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதனிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்.***

***வசனம் 13.*** *முதல்* ***ஐயோவில்,*** *மற்றவைகளில் குறிப்பிடுவது போலவே, இயேசு* ***வேதபாரகரையும் பரிசேயர்களையும்*** *குற்றப்படுத்தி அவர்களை* ***மாய்மாலக்காரர்கள்*** *என்றார் (23:15, 23, 25, 27, 29). "மாய்மாலக்காரன்" எனும் வார்த்தையின் பொழிப்புரை கிரேக்க மொழியில் (hupokritēs) ஒரு அரங்கத்தில் நடிக்கும் "நடிகனுக்கு" ஒப்பிடப்படுகிறது. ஒருவன் தனது சுயத்துக்கு நேர் எதிராக முகமூடி அணிந்து ஒரு கதாபாத்திரத்தை ஏற்று நடத்துவதைக் குறிக்கிறது (6:2, 5ன் விளக்கவுரையைக் காண்க). இந்த மதத்தலைவர்கள் அவர்களின் உண்மைத்தன்மைக்கு எதிராக நீதிமான்களாய் நடிக்கிறார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார்.*

*யூதமத தலைவர்கள் மனுஷர் பிரவேசிக்காதபடி* ***பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறார்கள் என்று*** *கர்த்தர் சொன்னார். "பூட்டிப்போடுகிறீர்கள்" எனும் கிரேக்கப் பதம் (kleiō) "மூடி விடுதல்," "பூட்டுப் போடுதல்," "தடையை ஏற்படுத்துதல்" என்றெல்லாம் பொருள்படும், இது "திறவுகோலுடன்" தொடர்புடைய ஒரு வார்த்தை (kleis). பின்னதான பதம் இயேசு பேதுருவினிடத்தில் "ராஜ்யத்தின் திறவுகோலைக் கொடுப்பதாகச்" சொன்ன வாக்குத்தத்தத்தில் காணுகிறது (16:19). ஆதலால், யூதமதத் தலைவர்களுக்கும், இயேசுவின் சீஷர்களுக்குமிடையுள்ள வித்தியாசங்களைக் காட்டலாம். வேதபாரகரும் பரிசேயரும் மனுஷரை ராஜ்யத்துக்குப் புறம்பாக்கும்போது, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் இராஜ்யத்தின் தகவுகளைத் திறந்து ஜனங்கள் உள்ளே பிரவேசிக்க விடுவார்கள் (காண்க 16:19ன் விளக்கவுரையைக் காண்க). திறவுகோல்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறிப்பிடுகிறது. இத்துடன் சம்பந்தப்பட்ட மற்றொரு வசனப்பகுதியில், இயேசு சில "நியாய சாஸ்திரிகளை" (வேதபாரகரை)க் கண்டித்து அவர்கள் அறிவாகிய "திறவுகோலை எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னார்" (லூக்கா 11:52). மனிதப் பாரம்பரியங்கள்*

மற்றும் மாய்மாலமான முன்னுதாரணம் கொண்டிருந்த அவர்கள், கிறிஸ்துவை புறம்பாக்கி, சத்தியத்தை நேர்மையாய் தேடுபவர்களை தவிர்த்தார்கள்.

இயேசு தமது வாக்கியத்தை மிகத் தெளிவாக்கி, **நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை** என்று சொன்னார். வேதபாரகர் மற்றும் பரிசேயரில் அநேகரும் கிறிஸ்துவையும். அவருடைய ராஜ்யத்தையும் புறக்கணித்தது துன்பியல் செயலாகும். ஆகிலும், இயேசுவுக்கு விரோதமாய் ஜனங்களுடைய மனங்களை விஷமாக்கிய செயல்கள் இன்னும் மோசமானது. யோவான் புத்தகத்தில் அநேக வசனப்பகுதிகள் யூதர்கள் இயேசுவிடத்தில் விசுவாசம் வைத்ததாக வெளிப்படுத்துகின்றன, ஆனால் அவர்கள் தங்களில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட பயந்தார்கள், ஏனெனில் அவர்களுடைய தலைவர்கள் அவர்களை ஜெப ஆலயங்களை விட்டு வெளியேற்றி விடுவார்கள் அல்லது வேறு வழிகளில் துன்புறுத்தக் கூடும் என்று அவர்களினிமித்தம் பயந்தார்கள் (யோவான் 7:12, 13; 9:22; 12:42; 19:38).

**வசனம் 14.** ஏற்கனவே குறிப்பிட்டபடி, சில பிரதிகள் கூடுதல் ஐயோ எனும் வார்த்தையை பயன்படுத்தியுள்ளது. அது அநேகமாக மாற்கு 12:40 லிருந்தோ லூக்கா 20:47 லிருந்தோ பெறப்பட்டதாக இருக்கலாம்: ... **உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்.** யூத மதத்தலைவர்கள் வேண்டுமென்றே விதவைகளை அவர்களுடைய தோட்டங்களின் வருமானத்திலிருந்து வஞ்சித்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் அந்தத் தோட்டங்களில் தங்களுடைய இறந்து போன புருஷர்களால் நியமிக்கப்பட்டிருந்த பாதுகாவலர்கள், இந்த தோட்டத்தில் வரும் அதிகப்படியான வருமானங்களைக் கொள்ளையிட்டிருக்கலாம்.[3] இன்னொரு சாத்தியக் கூறு யாதெனில் இந்த யூத மதத் தலைவர்கள் அப்படிப்பட்ட விதவைகளின் உபசரிக்கும் சூழலை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டிருக்கலாம்.[4] விசேஷமாக சமீபத்தில் தன் துணையை இழந்து தவிக்கிற ஒருவர் எளிதாக இப்படிப்பட்ட ரீதியில் வஞ்சிக்கப்பட்டனர். துக்கித்துக் கொண்டிருக்கும் விதவையை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளுவார்கள் என்பது வருந்தத்தக்கது, அதிலும் விசேஷமாக வஞ்சிக்கிறவன் பக்தி மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு தலைவனாயிருப்பானானால் மிகவும் கண்டிக்கத்தக்கது.

அந்த மாய்மாலக்காரர்கள் அவர்களுடைய "நீண்ட ஜெபத்தால்" அறியப்பட்டிருந்தார்கள். இயேசு ஏற்கனவே அவர்கள் ஜனங்களுடைய கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் தங்களுடைய ஜெபங்களை நீடித்தும், அலப்பியும் செய்தார்கள் என்பதை அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வந்தார் (6:5-7 ற்கான விளக்கவுரையைக் காண்க). இந்த மனுஷர்களின் தேவபக்தியெல்லாம் சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட ஜனங்களின் சொத்துக்களை இச்சித்து திருடிக்கொள்வதில்தான் பயன்படுத்தினார்கள்.

இந்த வசனத்தின் கடைசி வாக்கியம், **இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்**, மீண்டும் ஒரு முறை நரகத்தில் கொடுக்கப்படும் படிப்படியான அளவு தண்டனையைக் குறித்த கேள்வியை நமது மனதில் இது கொண்டு வருகிறது. இந்தக் கருத்தை ஆதரித்து அநேக வசனப்பகுதிகள் காணுகின்றன (11:23, 24; லூக்கா 12:47, 48; 2 தீமோத்தேயு 4:14; எபிரெயர்

*2:2, 3; 10:29; யாக்கோபு 3:1).* ஒவ்வொரு மனிதனுடைய கிரியைகளின் அடிப்படையில் தேவன் தமது தண்டனையைக் கொடுப்பார் (ரோமர் *2:5, 6; 2* தெசலோனிக்கேயர் *1:7, 8).* வசனத்தின் முடிவுரையின்படி அதிக ஆக்கினையை பெறத் தகுதியானவர்கள் பெரிய ஆக்கினையையும், குறைவான ஆக்கினையைப் பெறத் தகுதியானவர்கள் குறைவான ஆக்கினையையும் அடைவார்கள்.

## இரண்டாவது ஐயோ (23:15)

**[15]மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்.**

**வசனம் 15.** முதல் ஐயோவில் யூதமதத் தலைவர்கள் இராஜ்யத்துக்குள் மற்றவர்கள் பிரவேசிப்பதை தடைபண்ணினமித்தம் கண்டனம் பண்ணுகிறார் *(23:13).* அதன் தொடர்ச்சியாக, இரண்டாவது **ஐயோ** என்பதை மற்றவர்களைத் தங்களுடைய மாய்மாலத்துக்கு மாற்றிக் கொண்டிருந்தமையைக் குறித்து அவர்கள் மீது கூறப்படுகிறது.

**மார்க்கத்தானாக்குதல்** எனும் வார்த்தை (*prosēlutos*) வழக்கமாக ஒரு புறஜாதி யூத மார்க்கத்துக்கு மனமாறுவதைவைத்து அவனைக் குறிப்பிடுவது. "வாசலின் மார்க்கத்தானாகுதல்" என்பது உண்மையில் யூதனாவதில்லை; அவர்கள் தேவ பயமுள்ளவர்களாய், யூதமத அனுதாபிகளாய் இருப்பவர்கள் (நடபடிகள் *10:2, 22, 35; 13:16, 26, 50; 16:14; 17:4, 17; 18:7).*[5] "யூதமார்க்கத்தமைந்தவன்" என்பது விருத்தசேதனம் பெற்று உண்மையில் யூதனாகமாறுபவன் (நடபடிகள் *2:10; 6:5; 13:43).* இருப்பினும், "தங்கள் மார்க்கத்தானாக்கும்படி" என்று இந்த வசனப்பகுதியில் குறிப்பிடப்படுகிற நபர் பரிசேய பிரிவுக்கு மனமாற்றப்படுபவன் என்று பொருள்.

ஒருவனை தனது பிரிவுக்கு மாற்றும் பொருட்டு ஒரு பரிசேயன் தனது பெலனையெல்லாம் செலவழித்து மாற்றுவான். **சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிந்து** எனும் பதம் மிகைச் சொல்லாக "பெரிய பிரயாசம் எடுத்துக் கொள்ளுதலைக்" குறிப்பது. கிரேக்கப் பண்பாடுடைய யூதர்கள் புறஜாதிகளுக்கு முன்பாக யூத மார்க்கத்தை கவர்ச்சிகரமானதாக காட்ட முயற்சித்தனர். அவர்களுடைய பிரயாசம் கொஞ்சம் வெற்றியைக் கொடுத்தாலும்,[6] பரிசேயர்களுக்கு கிடைத்தபலன் உற்சாகமிழக்கச் செய்தது.

ஒருமுறை ஒருவனைத் தங்கள் மார்க்கத்தானாக்கிய பிறகு தங்களைப் போலவே அவர்களை **இரட்டிப்பான நரகத்தின் பிள்ளைகளாக்குகிறார்கள்.** "நரகத்தின் மகன்" என்பது நான்கு இனக் கூட்டு குழுவின் சொல்படி ஒருவன் நரகத்துக்கு மட்டுமே உரியவன் என்று பொருள்படும்.[7] இந்த மனமாற்றப்பட்டோர் தங்களுடைய ஆசான்களை மிஞ்சி வைராக்கிய வெறி கொண்டவர்களாயிருந்தனர்; அந்த வைராக்கியம் பொய்யையும் மாய்மாலத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததால், அவர்கள் இரட்டிப்பான ஆக்கினைக்குப பாத்திரராயிருந்தார்கள்.

# *மூன்றாவது ஐயோ (23:16-22)*

***16குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில் லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின் பேரில் சத்தியம் பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள்.***

***17மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?***

***18மேலும் எவனாகிலும் பலிபீடத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின் மேல் இருக்கிற காணிக்கையின் பேரில் சத்தியம் பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள்.***

***19மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையை பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?***

***20ஆகையால், பலிபீடத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின் பேரிலும், அதின் மேலுள்ள எல்லாவற்றின் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்.***

***21தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின் பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்.***

***22வானத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின் பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்.***

***வசனம் 16.*** *மற்றவைகளைக் காட்டிலும் இந்த மூன்றாவது* ***ஐயோ*** *சற்று வித்தியாசமாக துவங்குகிறது. "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே," என்று அந்தத் தலைவர்களை குறிப்படுவதற்குப் பதிலாக, இயேசு அவர்களை* ***குருடரான வழிகாட்டிகளே*** *என்று அழைக்கிறார். முன்பு ஒருமுறை, பரிசேயர்களைக் குறித்து இயேசு சொன்னார், "அவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்" (15:14). பரிசேயர்கள் நீண்டகாலமாக தங்களை ஆவிக்குரிய வெளிச்சம் பெற்று எல்லாம் அறிந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள், இருந்தும் ஆவிக்குரிய முறையில் குருடர்களாயிருந்தார்கள். அவர்கள் சத்தியத்தை அறியாதவர்களாயிருந்தார்கள்! அவர்கள் தாமே சத்தியத்தினிடத்தில் வராதிருந்தால், பிறகு அவர்களும் அவர்களைப் பின்பற்றுவோரும் நியாயத்தீர்ப்பு நாளில் நஷ்டத்தையும் நரகத்தில் தள்ளுண்டு போவதையுமே காண்பார்கள்.*

*23:16-22ல், சத்தியம் பண்ணுவதை உதாரணப்படுத்தி பரிசேயர்களின் ஆவிக்குரிய குருட்டுத் தன்மையை இயேசு எதிர்க்கிறார் (5:34-37 ற்கான விளக்கவுரையைக் காண்க). சத்தியம் பண்ணுதலில் உள்ளடங்கிய அநியாயமான வாதத்தைக் குறித்து அவர்கள் மீது அவர் எரிச்சலடைந்தார். தேவாலயத்தின் மீதும், பலிபீடத்தின் மேலும் வானத்தின் பேரிலும் சத்தியம் பண்ணுதல் ஜீவனுள்ள தேவன் பேரில் சத்தியம்*

*பண்ணுதலாகாது என்று நம்புவது மதியீனமானது. வார்த்தை ஜாலங்களால் தேவன் சிக்கவைக்கப்படமுடியாது. இந்த ஐயோ, சத்தியம் பண்ணுதற்கு அனுமதியளிப்பதல்ல, மாறாக அவருடைய எதிர்ப்பாளர்களின் குருட்டுத் தன்மையின் அடையாளத்தையே அது காட்டுகிறது.*[8]

*பரிசேயர்கள் அவர்களுடைய சீஷர்களிடம் சொல்லுவார்கள்,* ***எவனாகிலும் தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின் பேரில் சத்தியம் பண்ணினால் அவன் கடனாளி.*** *தேவாலயம்* "temple" (*naos*) - *உள்பிரகாரம் - தேவனுடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்தியது; அங்கே அவருடைய நாமம் விளங்கியது (2 நாளாகமம் 5:11-14; 6:18-21). இருப்பினும், தேவாலயத்தின் பேரில் ஒருவன் சத்தியம் செய்வதைக் காட்டிலும் ஒருவன் தேவாலயத்திலுள்ள பொன்னின் பேரில் சத்தியம் பண்ணுவதைக் குறித்து பரிசேயர்கள் கண்ணோக்கமாய் இருந்தார்கள். அந்தப் பொன் அநேகமாக உள்பிரகாரத்தின் வெளிப்புற சுவரை அலங்கரித்த தகடுகளாக இருக்கலாம். இதை ஜோசிபஸ் எழுதியதாவது,*

> *இப்பொழுது, தேவாலயத்தின் வெளிமுகப்பு அதன் முன்புறம் ... எல்லா இடமும் மிகவும் எடை அதிகமுள்ள தங்கத் தகடுகளால் மூடப்பட்டிருந்தது, மற்றும், சூரிய உதயம் முதன் முதலில் தோன்றியவுடனே, நெருப்பு போல மிக அதிகமாய் ஜொலிக்கும், அதை பலவந்தமாய் பார்க்க முற்பட்டாலும் அவர்கள் கண்களை திருப்பிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், சூரியனின் நேரடிக்கதிரைப் பார்க்கும் போது என்ன செய்வார்களோ அப்படிச் செய்தார்கள்.*[9]

*மற்றொரு சாத்தியக்கூறு தேவாலயத்துக்கு வருவோர் காணிக்கையாகப் படைத்த பொருள் பொன்னாகவும் இருக்கலாம்.*[10]

***வசனம் 17.*** *இயேசு பரிசேயரை* ***மதிகேடரே*** *என்றும் சொன்னார். இதற்கு முன்பு கோபத்தில் ஒருவன் தன் சகோதரனை "மூடனே" என்று சொல்லுவதைக்* (*mōros*) *குறித்து எச்சரித்தார் (5:22).* Alan Hugh McNeile *இதை குறிப்பிடும்போது இங்கே சொல்லப்பட்ட வார்த்தை முக்கியமல்ல, வார்த்தையைச் சொல்லும் போது இருக்கிற ஆவிதான் (மனநிலைதான்) பார்க்கப்பட வேண்டியது என்று நினைக்கிறார்.*[11] *அவர்களுடைய வாதத்தின் மதியீனத் தன்மையை இயேசு எதிர்த்தார். இயேசு அவர்களிடம்,* ***... எது முக்கியம், பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?*** *என்று கேட்டார். பொன்னைக் காட்டிலும் தேவாலயமே முக்கியமென்பதைத் தெளிவாகக் காணலாம். தேவாலயம் பொன்னை பரிசுத்தமாக்கியது மறுதலை எதிராக அல்ல.*

***வசனம் 18.*** *இந்தப் பரிசேயர்கள் எவனாகிலும்* ***பலிபீடத்தின்*** *பேரில் சத்தியம் பண்ணினால் அதினால்* ***ஒன்றுமில்லையென்றும்,*** *எவனாகிலும்* ***பலிபீடத்தின் மேலுள்ள காணிக்கையின்மேல்*** *சத்தியம் பண்ணினால் அவன் தன் பொருத்தனையை* ***நிறைவேற்ற வேண்டிய கடனாளி*** *என்றனர். இங்கே குறிப்பிடப்படுகிற பலிபீடம் தேவாலய நுழைவு வாசலிலின் முன்பகுதியில் வைக்கப்பட்டிருந்த தகனபலி பீடத்தைக் குறிக்கும். இந்த பலிபீடத்தின் மேல் ஆசாரியர்கள் தினந்தோறும் பலியிட்டார்கள். செலுத்தப்பட்ட வேறு பலிகள் தானியங்களும் திராட்ச ரசமும் ஆகும். கிரேக்க மொழியில் "பலிசெலுத்தல்"*

(*dōron*) என்பது “வெகுமதி” என்றும் (NIV) மொழிபெயர்க்கப்படலாம்.

***வசனம் 19.*** *மீண்டும் ஒருமுறை, பரிசேயர்களின் வாக்கு வாதம் தவறானதாக இருந்தது. இயேசு,* ***எதுமுக்கியம்? காணிக்கையோ, காணிக்கையை பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?*** *என்று கேட்டார். யாத்திராகமம் 29:37 சொல்லுகிறது, “பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கிறது.” பலிபீடம், காணிக்கைகளை பரிசுத்தமாக்கியதால், அது மிகவும் முக்கியமானது.*

***வசனங்கள் 20-22. பலிபீடத்தின் மேல்*** *சத்தியம் பண்ணுவது* ***அதின் மேலுள்ள எல்லாவற்றின் மேலும்*** *சத்தியம் பண்ணுவதாகும். மாய்மாலக்காரர்கள் சத்தியம் பண்ணினாலும் அதைக் கைக் கொள்ள வேண்டுவதில்லை என்று பரிசேயரின் சட்டம் சொல்லுகிறது - பொய் சொல்லுவதை நியாயப்படுத்துகிறதற்கு ஒரு வசதி. பரிசேயர்கள் எல்லாவற்றிலும் தலைகீழ் மாற்றத்தைக் கொண்டிருந்தனர் என்றும், தமக்கு செவி கொடுப்போர் செய்யும் ஒவ்வொரு பொருத்தனையும் கட்டுப்படுத்தக் கூடியதே என்று இயேசு குறிப்பிட்டார்.*[12]

*எப்பொழுதெல்லாம் ஜனங்கள்* ***தேவாலயத்தின் மேல்*** *சத்தியம் பண்ணுகிறார்களோ அப்பொழுதெல்லாம்* ***அதில் வாசம் பண்ணுகிற*** *தேவன் பேரில் சத்தியம் பண்ணுகிறார்கள். தேவாலயம் - குறிப்பாக, மகா பரிசுத்த ஸ்தலம் - தேவனுடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்தக் கூடியதாக இருந்தது. பரலோகத்தில் இருக்கும் மெய்யான தேவனுடைய சிங்காசனத்திற்கு அது நிழலாயிருந்தது (காண்க எபிரெயர் 9:1-14).*

*மிஷ்னாவின்படி, “வானத்தின் பேரிலும் பூமியின் பேரிலும்” சத்தியம் பண்ணுவோர் விதிவிலக்கானவர்கள். எப்படியிருப்பினும், அவர்கள் தேவனை வழிபடும்போது (அதோனி, யாவே, அல்லது சர்வவல்லவர் என்று அழைத்து) பண்ணும் சத்தியத்தினால் அவர்கள் கட்டப்பட்டவர்கள்.*[13] *இதற்கு முரணாக, சத்தியம் பண்ணுகிற யாரும்* ***வானத்தின் பேரில்*** *சத்தியம் பண்ணுகிறவன்* ***தேவனுடைய சிங்காசனத்தின் பேரிலும் அதின் மேல் வீற்றிருக்கிறவர் பேரிலும்*** *சத்தியம் பண்ணுகிறான், ஏசாயா 66:1ல், தேவன் சொன்னார், “வானம் என்னுடைய சிங்காசனம், பூமி எனது பாதப்படி.”*

*அப்படிப்பட்ட சத்தியம் செய்கிற எல்லாவற்றுக்கும் எதிராக இயேசு எச்சரிக்கை கொடுத்தார் (5:33-37). எந்த ஒரு சத்தியம் (பொருத்தனை) செய்தாலும் அதை நிறைவேற்ற ஒருவன் கடனாளியாயிருக்கிறான். ஒவ்வொரு பொருத்தனையும், எப்படிப்பட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும், தேவனே தலையாய சாட்சியாயிருக்கிறபடியால், நமது வார்த்தைகளுக்கு அவரே இறுதி நியாயாதிபதி (காண்க 12:36, 37).*[14]

## நான்காம் ஐயோ (23:23, 24)

***23மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய: நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்; இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே.***

*[24]குருடரான வழிகாட்டிகளே, கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவராயிருக்கிறீர்கள்!*

***வசனம் 23.*** நான்காவது **ஐயோ** தசம பாகம் செலுத்துவதை உட்படுத்தியது. **தசம பாகம்** செலுத்துதல் என்பது பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தல், திருமறையில் தசமபாகம் செலுத்துவதைக் குறித்து பேசுகிற முதல் இடம் மெல்கிசேதேக்கிற்கு ஆபிரகாம் தசமபாகம் செலுத்தும் காட்சிதான், அவன் சாலேமின் ஆசாரியனாகவும் ராஜாவாகவும் இருந்தான், எருசலேமின் பழைய பெயர் சாலேம் (ஆதியாகமம் 14:18-20). நியாயப்பிரமாணத்தில் கோரப்பட்ட தசமபாகம் பல வகைகளில் காணப்பட்டது; மூன்று வித்தியாசப்பட்ட தசமபாகம் செலுத்துதல் அமுலில் இருந்ததாக சிலர் நம்புகின்றனர். தேவன் இஸ்ரவேலர்களை கட்டளையிட்டு நிலத்தின் வித்துக்களிலும் கனிகளிலும் பத்தில் ஒரு பங்கும் ஆட்டு மந்தையிலும் பத்தில் ஒருபங்கும் அவருக்குப் பரிசுத்தமானது (லேவியராகமம் 27:30-33). இந்த முறைமை தேவனே நிலத்திற்கு உரிமையாளர் என்பதையும் ஆஸ்திகளை அளிப்பவர் என்பதையும் ஏற்றுக் கொள்ளச் செய்கிறது (காண்க லேவியாரகமம் 25:23; உபகாமம் 8:17, 18). இந்த தசம பாகம் லேவியர்கள் முன்பு ஆசரிப்புக் கூடாரத்திலும் பின்பு தேவாலயத்திலும் பணிவிடை ஊழியம் செய்ததனிமித்தம் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது (எண்ணாகமம் 18:21-24).[15] மற்ற வசனப்பகுதிகளில் தசம பாகம் தொழுகை செய்வோர் லேவியருடன் அவருடைய நாமம் விளங்கும் என்று சொல்லிய இடத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் (உபாகமம் 12:5-19; 14:22, 23). இந்தப் பொருட்களை எருசலேமுக்கு கொண்டு போக முடியாத அளவுக்கு தூரமாயிருப்பின், அந்த இஸ்ரவேலன் அவைகளை விற்று, பணத்தை எருசலேமுக்குக் கொண்டு போய், தேவையானவைகளை அங்கே வாங்கிக் கொள்ளலாம் (உபாகமம் 14:24-27). ஒவ்வொரு மூன்றாவது வருடமும், தசம பாகத்தை ஒருவருடைய சொந்த பட்டணத்தின் வைப்பில் வைக்கலாம். அது லேவியருக்கும், திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கும், அங்கு குடியிருக்கும் அந்நியருக்கும் உதவியாக செய்யப்பட வேண்டும் (உபாகமம் 14:28, 29; 26:12).

**நற்தலாம், வெந்தையம், சீரகம்** ஆகியன உணவுக்கு சுவையை கூட்டுபவை, ஏசாயாவின் வார்த்தைப்படி, உழுகிறவன் "உளுந்தை விதைத்து சீரகத்தைத் தூவுகிறான்" (ஏசாயா 28:25). இந்த வாசனைத்திரவியங்கள் தசம பாகம் செலுத்தும் பிரமாணத்தின்படி "நிலத்தின் வித்துக்களிலும்" பத்தில் ஒரு பங்கு செலுத்தப்பட வேண்டியது (லேவியராகமம் 27:30; உபாகமம் 14:22).[16] பரிசேயர்கள் சிறிய இலைகளையும் நுண்ணிய விதைகளையும் கூட எண்ணிக்கையில் வைப்பதில் கூர்மையான அறிவுடையவர்கள். இயேசுவின் உவமைகள் ஒன்றில், பரிசேயன் ஒருவன் அகந்தையுடன், "என் சம்பாத்தியத்தி*லெல்லாம்* நான் தசம பாகம் செலுத்துகிறேன்" என்று சொன்னான் (லூக்கா 18:12; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). வேறொரு இடத்தில், அவர்கள் "ஒற்தலாம், மருக்கொழுந்து முதலிய சகல வித பூண்டுகளிலும்" தசம பாகம் செலுத்தினார்கள் என்று இயேசு சொன்னார் (லூக்கா 11:42).[17] விளக்கத்தில் அவர்கள் செலுத்திய கவனம் அவர்களை நீதிமான்களாகக் காட்டியது.

பரிசேயர்கள் இந்த சிறிய விஷயங்களில் உண்மையுள்ளவர்களாயிருந்த

போதிலும், **நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்திருக்கிறவைகளை விட்டு விட்டார்கள்.** இந்த வசனப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள "விசேஷித்திருக்கிறவைகள்" (*barus*) முக்கியமானது என்று பொருள், கடினமானதல்ல.[18] இப்படிப்பட்ட சொல்நடையூதர்களுக்கு பழக்கப்பட்டது ஏனெனில் ரபீமார்கள் நியாயப்பிரமாணத்தை இலேசானதாகவும் பாரமானவைகளாகவும் (ஆக இரண்டு பெரிய) பாகங்களாக பிரித்தனர் (5:19 ற்கான விளக்கவுரையைக் காண்க).[19] அந்த விசேஷித்தவைகளில் நீதி (ஏசாயா 1:17; எரேமியா 22:3; மீகா 6:8), **இரக்கம்** (ஓசியா 6:6; சகரியா 7:9, 10), மற்றும் **விசுவாசமுமாகும்** (ஆபகூக் 2:4). மற்றொரு நிகழ்வில், அவர்கள் "நீதியையும் தேவ அன்பையும்" (லூக்கா 11:42) விட்டு விட்டார்கள் என்று இயேசு சொன்னார். **இவைகளையும் செய்ய வேண்டும் அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே** என்பதை அவர் வலியுறுத்தினார்.

**வசனம் 24.** மறுபடியும் இயேசு பரிசேயர்களை **குருடரான வழிகாட்டிகளே** என்று குறிப்பிட்டார் (காண்க 23:16). அற்ப விஷயங்களில் கவனம் செலுத்தி மிகமுக்கியமான காரியங்களை கண்டு கொள்ளாமல் இருப்பதை ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறார். அவர்கள் தங்களைக் **கொசு இல்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறார்கள்** என்றார். கர்த்தர் இப்படிப்பட்ட உச்சக்கட்ட முரண்பாடுகளைக் குறிப்பிட்டு பேசுவதை அதிகமாய் விரும்பினார் (7:3, 4; 13:31, 32; 17:20; 19:24). கொசு ஒரு சிறிய பூச்சி, ஒட்டகத்திலிருந்து அதிகப்பட்ச முரண்பாடுள்ள ஒன்று, ஒட்டகம் பலஸ்தீனாவிலுள்ள பெரிய ஒரு விலங்கு. இது அவரது இரு பொருள் கொண்ட ஒப்புமைச்சொல்லாக, பழமொழியாக இருந்திருக்கலாம்,[20] அராமிக் மொழியில் இது ஒரு வார்த்தை விளையாட்டு. "கொசு" என்ற வார்த்தைக்கு *qalma'* அல்லது *qamla'* என்றும் பொருள்படும், "ஒட்டகம்" என்பது *gamla'* எனும் வார்த்தையைக் கொண்டுள்ளது.[21] கொசு மற்றும் ஒட்டகம் இரண்டுமே சடங்காச்சாரப்படி அசுத்தமானவைகளும் புசிப்பதற்குத் தடை செய்யப்பட்டவைகளுமாயிருந்தன (லேவியராகமம் 11:4, 20-23, 41-43). பரிசேயர்கள் தங்களுடைய திராட்சை ரசத்தில் பூச்சிகளும் புழுக்களும் விழாதபடிக்கு துணி மற்றும் சுள்ளிகளைப் பயன்படுத்தி வடிகட்டுவார்கள்.[22] இயேசுவின் உயர்வு நவழ்ச்சிக் சொல்லில் குறிப்பிடப்படுவது, சிறிய அசுத்தப்படுதலைக் கூட தவிர்க்கிற அவர்கள், பெரிய காரியங்களில் முரண்பட்டவர்களாயிருந்தார்கள் என்று காட்டுகிறது.

## ஐந்தாவது ஐயோ (23:25, 26)

***[25]மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது.***

***[26]குருடனான பரிசேயனே! போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு.***

**வசனம் 25.** ஐந்தாவது **ஐயோவில்,** இயேசு யூத மதத்தலைவர்களைக்

*குற்றப்படுத்தினார், ஏனெனில் அவர்கள் போஜனபாத்திரத்தின்* ***வெளிப்புறத்தை சுத்தமாக்கினார்கள்; உட்புறத்தையோ கண்டு கொள்ளவில்லை.*** *யூதர்கள் தங்களையும் தங்களுடைய போஜன பாத்திரங்களையும் சுத்தமாக்குவதை ஒரு சடங்காச்சாரமாகக் கொண்டிருந்தனர் (15:1-20; மாற்கு 7:1-8). அவர்கள் பாத்திரத்தின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் சுத்தம் செய்வதில் வித்தியாசத்தை ஏற்படுத்தினர்.*[23] ***வேதபாரகர் பரிசேயருடைய*** *இருதயத்தின் நிலைமையை விளக்கப்படுத்தும் பொருட்டு இந்த உதாரணத்தை பயன்படுத்தி இயேசு அதன் பின்னணியைக் குறிப்பிட்டார். அவரது தெளிவான குற்றச்சாட்டிலே அது வெளிப்பட்டது:* ***உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது.*** *ஒரு பாத்திரமோ கிண்ணமோ "கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்க இயலாது," ஆனால் ஜனங்கள் அப்படியிருப்பார்கள் (15:18, 19). இந்த மதத்தலைவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய உள்ளான நிலையைக் காட்டிலும் வெளிப்புற சடங்காச்சார சுத்திகரிப்பில் அதிக அக்கறை காட்டினர், இந்த பரிசேயர்கள் தங்களுடைய சடங்காச்சாரமான குளியலைக் குறித்து மிக எச்சரிக்கையாக இருப்பர், ஆனால் "பணத்தை மிகவும் நேசிக்கிறவர்களாகவும்" இருப்பர் (லூக்கா 16:14). "அநீதி" என்பதற்கு கிரேக்க வார்த்தை (akrasia) பாலுணர்வு ஒழுங்கீனம் என்றும் குறிப்பிடப்படுகிறது (1 கொரிந்தியர் 7:5). போஜன பாத்திரத்துடன் சம்பந்தப்படுத்தப்பட்ட அவர்களுடைய கிண்ணங்கள், எப்படியிருப்பினும், அவர்கள் ஒயின், பீர் போன்ற மது பானம் அருந்துவதற்கு பயன்படுத்தப்படுபவை.*

***வசனம் 26.*** *அவர்களுடைய பாவங்களுக்கும் உபரி அனுபவத்துக்கும் இயேசு சரியான நிவாரணத்தை அளித்தார்:* ***போஜன பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி முதலாவது அதின் உட்புறத்தை சுத்தமாக்கு.*** *லூக்காவில், அவர், "உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்கு சுத்தமாயிருக்கும்" என்றார் (லூக்கா 11:41).*

## *ஆறாவது ஐயோ (23:27, 28)*

***27 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.***

***28 அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.***

***வசனம் 27.*** *ஆறாவது* ***ஐயோ*** *தொடர்ந்து வெளிப்புறத் தோற்றத்திற்கும் உள்ளான உண்மைத்துவத்துக்கும் உள்ள வேறுபாட்டைப் பேசுகிறது.* ***வேதபாரகரும் பரிசேயரும் வெளியே அலங்காரமாய்க் காணப்படும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பிடப்படுகிறார்கள்,*** *ஒலிவ மலைகளின் அடிவாரத்தில் எருசலேமுக்கு அப்பால், பழங்கால கல்லறைகளைக் கொண்டுள்ள ஒரு இடுகாடு இருக்கிறது. புதிய ஏற்பாட்டு*

*காலத்தில், இது போன்ற கல்லறைகள் வருடந்தோறும் ஆதார் எனும் மாதத்தில் (பிப்ரவரி/மார்ச்) பதினைந்தாம் நாள் வாக்கில் ஆண்டுதோறும் சுண்ணாம்பால் வெள்ளையடிக்கப்பட்டது.*[24] *இப்படி வருடந்தோறும், ஏற்கனவே அடித்த சுண்ணாம்பு கரைந்து விடுவதால், புதுப்பிப்பது வழக்கம் (எசேக்கியல் 13:10-12ஐக் காண்க). கல்லறைகளுக்கு வெள்ளையடிப்பது பஸ்கா மற்றும் பெந்தெகோஸ்தே பண்டிகைகளுக்கு உலகின் பல இடங்களிலிருந்தும் எருசலேமில் கூடிவந்த திரளான யாத்ரீகர்களை அந்தப் பட்டணம் இன்னும் அதிகமான ஈர்ப்பை பெற்றது.*[25] *கூடுதலாக, அறியாமல் கல்லறைகளைத் தொடுவதைத் தவிர்ப்பதற்கும் இது செயல்பட்டது (லூக்கா 11:44). அப்படித் தொட்டால் அது அவர்களைச் சடங்காச்சாரத்தின்படி ஏழு நாட்களுக்கு தீட்டுள்ளவர்களாக ஆக்கிவிடும். குறிப்பிடப்பட்டது (எண்ணாகமம் 19:16) மற்றும் பண்டிகைக் காரியங்களில் பங்கு பெறத் தகுதியற்றவர்களாக்கியிருக்கும் (காண்க யோவான் 11:55; 18:28). இந்தக் கல்லறைகள் எவ்வளவாய் சிங்காரிக்கப்பட்டிருந்ததோ, அவ்வளவாய்,* ***அதினுள்ளே மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகலவித அசுத்தங்களினாலும் நிறைந்திருந்தது*** *என்று இயேசு குறிப்பிட்டார்.*

***வசனம் 28.*** *இந்த உருவகத்தை இயேசு வேதபாரகருக்கும் பரிசேயருக்கும் பயன்படுத்தினார்:* ***அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்,*** *என்றார். அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி வஸ்திரத்தின் தொங்கல்களை பெரிதாக்கி (23:5), "நீதிமான்களாய்த் தோன்றினார்கள்"; ஆனால் அவர்களுடைய இருதயம் கெட்டதாயிருந்தது. வில்லியம் ஹேன்ரிக்ஸன் "அக்கிரமம்" என்று குறிப்பிடப்படுவது "நியாயப்பிரமாணமற்றவர்களாய்" இருப்பதைக் குறிப்பதில்லை, "மாறாக தேவனுடைய பிரமாணத்தை பரியாசம் பண்ணுவதைப் போன்ற வாழ்க்கையைக் குறிக்கிறது."*[26]

*இத்துடன் தொடர்புடைய ஒரு கதையை தால்முத்தில் குறிப்பிடுகையில் ரப்பான் கமாலியேல் கொடுத்த ஒரு அறிவிப்பைப் பற்றி பேசுகிறது, அதில், "அவனுடைய பண்புக்கு ஒத்துப்போகாத வெளித்தோற்றத்தைக் கொண்டிருக்கும் எந்த ஒரு சீஷனும் பெத்ஹா - மித்ராஷில் பிரவேசிக்கலாகாது" என்று சொல்லப்பட்டிருந்தது. பின்னதாக, எல்லா மாணவர்களும் அந்த பயிலகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், நூற்றுக் கணக்கான இருக்கைகள் சேர்க்கப்பட்டன. கமாலியேல் அநேக நியாயப் பிரமாணத்துக்கு தகுதி வாய்ந்த வாலிபர்களை தான் இழந்து விட்டதாக நினைத்து, எச்சரிக்கையாக இருக்க முற்பட்டார். ஆகிலும், ஒரு சொப்பனத்திலே அவர் ஒரு வெள்ளை மரப் பீப்பாய் சாம்பலால் நிறைந்ததாய் பார்த்தபோது, அது வகுப்பிலே கலந்து கொள்ளாதவர்கள் உண்மைக்கு குறைவானவர்கள் என்று அடையாளப்படுத்தி அவருக்கு மறு உத்திரவாதம் அளித்தது.*[27]

## *ஏழாம் ஐயோ (23:29-33)*

***[29]மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி நீதிமான்களின் சமாதிகளைச்***

***சிங்காரித்து;***

***[30]எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்க மாட்டோம் என்கிறீர்கள்.***

***[31]ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்.***

***[32]நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்.***

***[33]சர்ப்பங்களே! விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?***

***வசனம் 29.*** *கல்லறையைக் குறித்த உருவகம் ஏழாவது* ***ஐயோவில்*** *தொடர்கிறது.* ***நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளை சிங்காரித்து*** *என்பது ஒரே காரியத்தை இரண்டு விதங்களாகச் சொல்லப்படுவதாக சிலர் பார்க்கின்றனர்: "கல்லறைகள்" "சமாதிகளுக்கு" சமம் என்றும் "தீர்க்கதரிசிகள்," நீதிமான்களுக்குச் சமம் என்றும் நினைக்கின்றனர். மற்றவர்கள் ஒப்பிடப்படும் வார்த்தைகளில் இலேசான பொருள் வித்தியாசம் இருப்பதாக நினைக்கின்றனர். கிரேக்க வார்த்தையில் mnēmeion ஞாபகச்சின்னம், நினைவகம் அல்லது "கல்லறை, சமாதி" என்றெல்லாம் பொருள்படலாம்.[28] கூடுதலாக, "தீர்க்கதரிசிகள்" என்பது உண்மையில் "நீதிமான்கள்" தான், என்றாலும் இங்கே குறிப்பிடும் "நீதிமான்கள்" தேவனுக்கு உண்மையாய் ஆராதனை செய்த ஏவப்படாத மனுஷர்களைக் குறிக்கும் (காண்க 10:41ன் விளக்கவுரை).*

W. F. Albright *மற்றும்* C. S. Mann, *ஆகியோரின் கூற்றுப்படி, "தீர்க்க தரிசிகளின் கல்லறைகளை கனப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு மதிப்பளிப்பதும் இயேசுவின் நாட்களில் நன்கு ஸ்தாபிதம் பெற்ற ஒரு வழக்கமாகும், அதேபோல பக்திமான்களின் கல்லறையில் புதைக்கப்பட்ட நினைவிடங்களைச் சிங்காரிப்பதும்" வழக்கமாகும்,[29] இந்த பிந்தின வழக்கம் இரண்டு ஏற்பாடுகளுக்குமிடையேயான துவக்கக் காலத்தில் ஏற்பட்டதாக தள்ளுபடியாகமம் சாட்சியமளிக்கிறது. சைமன் மெக்காபீ யூதர்களை விடுவிக்கும் பொருட்டு நடத்தின தனது குடும்ப உறுப்பினர்களை கனப்படுத்தினான்:*

> [Modein] *(அவன்) தனது தகப்பனுக்கும் சகோதரர்களுக்கும் கல்லறைக்கு மேல் நினைவிடங்களைக் கட்டினான்; அவன் அதை மிக உயரமாகக் கட்டி எல்லாரும் காணத்தக்கதாக அமைத்திருந்தான், அதன் முன்னும் பின்னும் பளபளப்பாக்கப்பட்டக் கற்களால் கட்டினான். அவன் மேலும் ஏழு பிரமிடுகளைத் தனது தகப்பனுக்கும் தாய்க்கும் நான்கு சகோதரர்களுக்குமாக ஒன்றுக்கொன்று எதிரெதிரே கட்டினான். பிரமிடுகளில் அவன் விஸ்தாரமான அமைப்பை கண்டுபிடித்தான், அதைச் சுற்றிலும் பெரிய தூண்களை அமைத்து அந்த தூண்களின் நிரந்தர நினைவாக கட்டியக்காரன் படைசீருடையை வைத்து, அந்த சீருடையின் அருகில் கப்பல்களை சிற்பமாக செதுக்கிவைத்தான், அதினால் கடலில்*

*பயணம் செய்யும் யாவராலும் அது பார்க்கப்படும்.*[30]

*இன்னொரு ஞாபகார்த்த கதைக்கு உதாரணமாக மகா ஏரோதுவைக் குறித்து ஜோசிபஸ் எழுதியவை, ஏரோது ராஜா தங்கத்தினாலான பொருள்களால் அலங்கரிக்கப்பட்ட தாவீதின் கல்லறையை கொள்ளையிட்டான். இரண்டாம் முறையும் போய், ஏரோதும் அவனுடைய மனுஷர்களும் கல்லறையை இன்னும் ஆழமாகத் தோண்டிய போது தாவீது சாலொமோன் ஆகியோரின் எஞ்சியுள்ளவைகளையும் நெருங்கினார்கள், அப்பொழுது அவனுடைய இரண்டு காவலர்கள் "நெருப்பு ஜுவாலையினாலே கொல்லப்பட்டார்கள். அதன் விளைவாக, ஏரோது மிகவும் பயந்து நடுங்கினான், எனவே நல்லிணக்க நினைவுச் சின்னங்களை ... வெண்கற்களால் கட்டி, கல்லறை வாயிலை மூடியதோடு, அவன் மிகப் பெரும் செலவு செய்து அதைக் கட்டி முடித்தான்."*[31]

*அநேக பழங்கால கல்லறை நினைவிடங்கள் எருசலேமில் இன்றுவரை நிலைத்திருக்கின்றன. கதிரோன் பள்ளத்தாக்கில் மூன்று நினைவிடங்கள் உள்ளன: அப்ஸலோமின் கல்லறை, சகரியாவின் கல்லறை மற்றும்* Bene Hezir *கல்லறை, ஆயினும் அவைகள் கட்டப்பட்ட காலம் இன்னமும் சர்ச்சைக்குரியதாயிருக்கிறது. முதல் இரண்டு கல்லறைகளும் தவறாக பெயரிடப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது; தாவீதின் குமாரனாகிய அப்ஸலோமோ அல்லது தீர்க்கதரிசியாகிய சகரியாகவோ இந்த இடத்தில் அடக்கம் பண்ணப்பட்டிருப்பார்களா என்பது சந்தேகமே.*

***வசனம் 30.*** *வேதபாரகரும் பரிசேயரும் தீர்க்கதரிசிகளின் கல்லறையை பெரிதும் மதித்தார்கள். அவர்கள் தங்கள்* **பிதாக்களுடைய நாட்களில்** *இருந்திருந்தார்களானால் அவர்களோடே* **தீர்க்கதரிசிகளின் இரத்தபலிக்கு உடன்பட்டிருக்க மாட்டோம்** *என்றார்கள் (21:35, 36 க்கான விளக்கவுரையைக் காண்க).*

***வசனம் 31.*** *அவர்களுடைய பிதாக்கள் தீர்க்க தரிசிகளை கொலை செய்தார்கள் என்பதை அவர்களே ஒத்துக் கொண்டார்கள் என்று இயேசு விளக்கப்படுத்தினார்:* **தீர்க்கதரிசிகளை கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்.** *அவர்களுடைய கொலைகார பிதாக்களுடைய இரத்த நாளங்களில் ஓடின இரத்தம், அவர்களுடைய "மெய்யான குமாரர்களுக்குள்ளும்" ஓடுகிறது என்பதை வரவிருந்த நிகழ்வுகள் நிரூபிக்கப் போகிறது. அவர்கள் அந்தக் கொலைகாரர்களின் மாம்சரீதியான வம்சாவளிமட்டுமல்ல, அவர்களைப் போன்றே ஆவிக்குரிய நிலையைக் கொண்டிருந்தனர்.*

*வேதபாரகர் பரிசேயருடைய மாய்மாலமே தெளிவாக காணப்பட்டது. தீர்க்கதரிசிகளின் கல்லறைகளை சிங்காரித்து, தங்களுடைய கனம் செலுத்துதலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் போதே, தீர்க்கதரிசிகளின் பாரம்பரியத்தின் வழியில் நின்ற - இயேசுவையும் சீஷர்களையும் - வன்மையாக எதிர்த்து நின்றார்கள் (21:37-39; 1 தெசலோனிக்கேயர் 2:14-16).*[32] *ஸ்தேவான் ஆலோசனை சங்கத்தை எதிர் கொண்டபோது, இதே கருத்தைத்தான் வெளிப்படுத்தினார்: "தீர்க்கதரிசிகளில் யாரை*

*உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள்" (நடபடிகள் 7:52).*

***வசனம் 32.*** *"நீங்களும் உங்கள் பிதாக்களுடைய அக்கிரம அளவை நிரப்புங்கள்" என்று இயேசு சொன்னார். இன்னொரு வகையில் இதைச் சொன்னால் இயேசு பின்னதாக யூதாஸிற்கு சொன்னதுதான்: "நீ செய்கிறதை சீக்கிரமாய்ச் செய் என்றார்" (யோவான் 13:27). ஆங்கில மொழிபெயர்ப்பில் (TEV) "எனவே, போங்கள், உங்கள் முதற்பிதாக்கள் ஆரம்பித்து வைத்ததை செய்து முடியுங்கள்!" என்று குறிப்பிடுகிறது. அலெக்ஸாண்டர் பால்மெயின் புரூஸ் இந்த சிந்தனையை விளக்கும் போது: "உங்கள் பிதாக்களின் அளவை நிரப்புங்கள்; தேவன் உங்களிடத்துக்கு அனுப்பிய தீர்க்கதரிசிகளை கொலை செய்வதன் மூலம் அவர்களுடைய தவறுகளுக்கு கிரீடம் இடுங்கள். உங்கள் இருதயங்களில் கொண்டுள்ள நெடுநாளைய எண்ணங்களை செயல்படுத்துங்கள் நேரம் வந்து விட்டது."[33] இயேசு உண்மையில் குறிப்பிட்ட பொருள், "கொடுக்கப்பட்ட எல்லா எச்சரிப்புகளுக்கும் நீங்கள் உங்கள் இருதயங்களை கடினமாக்கிக் கொண்டபடியால், இப்பொழுது பொறுப்பு முழுவதும் உங்களுடையது."[34] அநேக நிகழ்ச்சிகளில், யூதர்கள் ஏற்கனவே இயேசுவை மரண ஆக்கினைக்குள்ளாக்க சதி ஆலோசனை பண்ணினார்கள் (12:14; 21:46; மாற்கு 11:18; லூக்கா 19:47; யோவான் 5:18; 7:1, 19, 25; 8:37, 40; 11:53).*

**வசனம் 33.** யோவான் ஸ்நானன் தன்னிடம் ஞானஸ்நானம் பெறவந்த வேதபாரகரையும் பரிசேயரையும் பார்த்து யோர்தான் நதியில் சொன்னதாவது, *"விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்கு தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?" (3:7).* பரிசேயர்களைக் குறித்து இயேசு அதே உருவகத்தில் **விரியன் பாம்புக் குட்டிகளே** என்று சொன்னார் *(12:34ன் விளக்கவுரையைக் காண்க).* அவர்களின் எச்சரிக்கை வார்த்தைகள் புறந்தள்ளப்பட்டன; இப்பொழுது இயேசு, **நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?** என்று கேட்டார். அவருடைய சொல் அணி கேள்வியின் பொருள், அவர்கள் தங்களுடைய தீமையான திட்டங்களைத் தொடர்ந்து பின்பற்றுவார்களானால், நரக "ஆக்கினைக்கு அல்லது தண்டனைக்கு" தப்பித்துக் கொள்ள இயலாது என்பதே.

## கூடுதல் சிந்தனைகள்

*ஏழாவது ஐயோ குறித்து (23:34-36)*

***34ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேத பாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன், அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்.***

***35நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலி பீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலை செய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின்***

**இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும் படியாக இப்படிச் செய்வீர்கள்.**

**[36]இவைகளெல்லாம் இந்த சந்ததியின் மேல் வருமென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

***வசனம் 34.*** *அவர்களுடைய முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகளை கொலை செய்ததுபோலவே, வேதபாரகரும் பரிசேயர்களும் இயேசுவின் சீஷர்களை கொலை செய்வார்கள். சுவிசேஷத்தை அறிவிக்கும் பொருட்டு கர்த்தர் அவர்களிடத்தில்* ***தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகர்களுமாகிய*** *ஏவப்பட்ட மனுஷர்களையும் போதகர்களையும் அனுப்புவதாகக் கூறுகிறார், ஆயினும், அவர்களும் யூதமதத் தலைவர்களால் புறந்தள்ளப்படுவார்கள்:* ***அவர்களில் சிலரைக் கொன்று, சிலுவையில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்.*** *"சிலுவையில் அறைவீர்கள்" என்று இயேசு சொல்வதன் பொருள் யூதர்கள் "அவர்களை சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுப்பார்கள்" என்பதே. அவர்கள் அவருடைய சீஷர்களை ரோமர்களிடம் ஒப்புக் கொடுத்து, அவர்கள், அதன் விளைவாக, அவர்களை சிலுவையில் அறைந்து தண்டிப்பார்கள் (காண்க நடபடிகள் 2:36; 4:10). இங்கே இயேசு குறிப்பிடும் தீர்க்கதரிசனம் தமது சீஷர்களிடம் ஏற்கனவே கொடுத்திருந்த எச்சரிக்கையோடு சம்பந்தப்பட்டது (5:11, 12; 10:17, 23ன் விளக்கவுரையைக் காண்க).*

*இயேசுவின் முன்னுரைத்தலின்படியே, அவர் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், பிற போதகர்களையும் யூதர்கள் மத்தியில் அனுப்பினார். தீர்க்கதரிசனத்தின்படியே. அவர்கள் கடுமையாக துன்புறுத்தப்பட்டார்கள், அதுவும் அந்த சந்ததியிலேயே நடந்தது (23:36). அப்போஸ்தலர்கள் யூதர்களால் காவலில் போடப்பட்டனர், ஆனால் அவர்கள் தேவனிடத்தி லிருந்து அனுப்பப்பட்ட தூதனாலே அற்புதமாக விடுதலையாக்கப்பட்டனர் (நடபடிகள் 5:17-21). அவர்கள் மறுபடி கைது செய்யப்பட்டு ஆலோசனை சங்கத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்ட போது, அவர்கள் "வாரினால் அடிக்கப்பட்டு" "இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசக் கூடாது" என்று கட்டளையிடப்பட்டனர் (நடபடிகள் 5:27, 28, 40). ஸ்தேவான் முதல் கிறிஸ்தவ இரத்த சாட்சியானார், ஆலோசனை சங்கத்தின் கட்டளையின் பேரில் கல்லெறிந்து கொல்லப்பட்டார் (நடபடிகள் 6:12; 7:1, 57, 58).[35] அந்த வேளையில், சபைக்கு எதிராக ஒரு பெரிய உபத்திரவம் உண்டாயிருந்தது (நடபடிகள் 8:1). சவுல் சபையை நாசப்படுத்திக் கொண்டிருந்தான், வீடுகள் தோறும் போய் கிறிஸ்தவர்களை காவலில் போட்டான் (நடபடிகள் 8:3). அவர்கள் கொலை செய்யப்படும் போதெல்லாம் (தன்) வாக்குப்படி சவுலும் சம்மதித்திருந்தான் (நடபடிகள் 26:10). வெறிகொண்டவனாய் தொலை தூர பட்டணங்களுக்குப் போய் கிறிஸ்தவர்களை அவன் காவலில் வைத்தான் (நடபடிகள் 9:1, 2; 26:11).*

*யோவானின் சகோதரனாகிய, யாக்கோபு, முதலாம் ஏரோது அக்கிரிப்பாவால் சிரச்சேதம் பண்ணப்பட்டார், அவர்தான் முதல் இரத்த சாட்சியாய் மரித்த அப்போஸ்தலன் (நடபடிகள் 12:1, 2). இந்த ஏரோதும் இதே தண்டனையைக் கொடுக்கும்படி பேதுருவை சிறைவைத்தான்; ஆனால் தேவன் இடைப்பட்டு பேதுரு விடுதலை செய்யப்பட்டான் (நடபடிகள்*

*12:3-12).* பவுலும் அவரது உடன் ஊழியர்களும் யூதமதத் தலைவர்களால் உபத்திரவங்களையும் துன்பங்களையும் அனுபவித்து செல்லுமிடமெல்லாம் வாதிக்கப்பட்டார்கள். தங்கள் சொந்த உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அடிக்கடி பக்கத்து பட்டணங்களுக்கு ஓடிவிடுவதுண்டு.[36]

**வசனம் 35.** அவருடைய சீஷர்களை உபத்திரவப்படுத்தியதால், **பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப் பழியெல்லாம் வேதபாரகர் மற்றும் பரிசேயர் மேல் விழும்** என்று இயேசு சொன்னார். தேவனுடைய கபடற்ற ஊழியர்களை கொலை செய்வதன் மூலம் இரத்தபழி வருடக் கணக்கில் அவர்களைச் சூழ்ந்து கொண்டிருந்தது. தேவன் இஸ்ரவேல்மேல் கொண்டு வரப்போகிற நியாயத்தீர்ப்பே உச்சக்கட்ட முடிவைச் சீக்கிரத்தில் கொடுக்கும்.

"பூமியின் மேல் சிந்தப்பட்ட அனைத்து நீதிமான்களின் இரத்தம்" என்பதற்குச் சான்றாக இரண்டு மனுஷர்கள் கொலையுண்டதை விளக்கப்படுத்துகிறார். முதலாவது கொலை செய்யப்பட்ட **நீதிமான் ஆபேல்,** தன் சகோதரன் காயீனால் கொலை செய்யப்பட்டான் (ஆதியாகமம் 4:8). "தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தம்" காயீன் தன் சகோதரனை கொலை செய்தான் என்று யோவான் எழுதினார் (1 யோவான் 3:12). எபிரெயர் எழுத்தாளர், "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனைக்காட்டிலும் மேன்மையான பலியைச் தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்றார் (எபிரெயர் 11:4). அவன் கபடற்றவனாயிருந்தபடியால், ஆபேலின் இரத்தம் பூமியிலிருந்து நீதிகேட்டு கூப்பிட்டது (ஆதியாகமம் 4:10; எபிரெயர் 12:24).

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட மனுஷனாகிய **சகரியாவை,** அடையாளப்படுத்துவது கடினம் அவன் **பரகியாவின் குமாரன்** என்றும், **தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே கொல்லப்பட்டான்** என்றும் குறிப்பிடப்படுகிறது, Gary M. Burge, கூற்றுப்படி, திருமறையில் முப்பதுக்கு மேற்பட்ட மனிதர்கள் "சகரியா" எனும் பெயரில் குறிப்பிடப் பட்டுள்ளனர்.[37] அதில் ஒருவன் மட்டுமே தேவாலயப்பகுதியில் கொல்லப்பட்டான்; இராஜாவாகிய யோவகாஸின் உத்திரவின் பேரில் விக்கிரகத்துக்கு அவன் எதிர்த்து நின்றபடியால், கல்லெறிந்து கொல்லப்பட்டான். அவனுடைய மரணம் "கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களில் நடந்தது" (2 நாளாகமம் 24:20, 21). இந்த விவரங்கள் இயேசுவின் விளக்கத்துக்கு ஒத்து வருவதால், அந்த சகரியா "யொய்தாவின் குமாரனாகிய ஆசாரியனின் மகன்," "பரகியாவின் குமாரனல்ல" என்று தெரிகிறது.

வித்தியாசப்பட்ட வழிகளில் விளக்கம் கொடுக்கும் விளக்கவுரையாளர்களால் இந்த கடினமானவை தீர்த்து வைக்கப்படுகிறது. (1) சில யூதர்கள் முதல் நூற்றாண்டில் கொலை செய்யப்பட்ட சகரியாவைக் குறித்துதான் இயேசு பேசினார் என்கின்றனர். அவர்கள் முன்னிலைப் பிரிதிப் பெயர் சொல்லாகிய **நீங்கள்** என்பதை வலியுறுத்துகின்றனர்: "தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்குமிடையே *நீங்கள்* கொலை செய்த" (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). இந்த வகையில், காலநேரம் பிரிசீலிக்கப்பட

*வேண்டியதாயிருக்கிறது. அது சிருஷ்டிப்பிலிருந்து முதல் நூற்றாண்டு வரையிலான காலம் - இயேசுவுக்கு செவிசாய்ப்போருக்கு, எல்லா காலத்தையும் குறிக்கும். ஜோசிபஸ் தமது அறிக்கையில் ஒரு மனிதனின் பெயரைச் சொல்லி, "பாரூக்கின் குமாரனாகிய சகரியா" தேவாலயத்தில் கொலை செய்யப்பட்டான், ஆனால் இது செலோத்தே என்னப்பட்டவர்களால் எருசலேம் அழிவு கிட்டிச் சேரும் நேரத்தில் செய்யப்பட்டது என குறிப்பிட்டார்.*[38] *இந்தக் கொலை இயேசு இந்த வசனத்தில் பேசினபிறகு ஏறத்தாழ நாற்பது வருடங்கள்* ***கழித்து*** *நடந்தது.*

*(2) மற்றவர்கள் இயேசு, சிறிய தீர்க்கதரிசன புத்தகங்களில் ஒன்றை தன்பெயரில் எழுதிய சகரியாவைக் குறித்துப் பேசுவதாக கூறுகின்றனர். சகரியா 1:1ல் தன்னைக் குறித்து அவர் "பெரகியாவின் குமாரனாகிய சகரியா" என்று குறிப்பிடுகிறார். இயேசுவால் குறிப்பிட்டுப் பேசப்பட்ட சகரியாவுடன் இந்தப் பெயர் ஒத்துப்போகிறது. இந்த அடையாளம் சரியாக இருக்குமானால், காலகட்டம் சிருஷ்டிப்பிலிருந்து பழைய ஏற்பாட்டின் முடிவு காலத்திற்குப் பொருந்தும், சகரியா கடைசிகால தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்தபடியால் அப்படியாகும். அவருடைய ஊழியம் சிறையிருப்புக்குப் பின், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு வரை இருந்தது. இதில் பெரிய பிரச்சனை என்னவெனில் அவருடைய மரணம் எப்படி நடந்ததென்று வசனம் எதுவும் குறிப்பிடுவதில்லை. தேவாலயத்தை மீண்டும் எடுத்துக் கட்ட ஊக்கப்படுத்திய, இந்த தீர்க்கதரிசி தேவாலயத்திலேயே, உண்மையில் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடுமா?*

*(3) வசனம் 35 யொய்தாவின் குமாரன் சகரியாவைத்தான் குறிக்கிறது என்று வேறு சிலர் குறிப்பிடுகின்றனர். "பெரகியாவின் குமாரன்" என்பதற்கான விளக்கத்தை எண்ணற்ற ஆலோசனைகளால் சொல்லப்படுகிறது. திருமறையில் பேசப்படும் ஜனங்கள் அநேகர் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களைக் கொண்டிருந்த படியால், யொய்தா என்பதன் மறுபெயர் பெரகியாவாக இருந்திருந்திருக்கலாம். மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில் பெரகியா சகரியாவுக்கும் யொய்தாவுக்கும் முற்பிதா. இந்த சம்பவத்தில் "குமாரன்" எனும் பதம் "சந்ததி" என்பதற்காக பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும்.*[39] *"பெரகியாவின் குமாரன்" எனும் வார்த்தைகள் பின்னதாக வேதபாரகனால் மாற்றி நகல் எடுக்கப்பட்டு இரண்டு சகரியாக்களையும் குழப்புகிற சூழ்நிலையை உண்டாக்கியிருக்க வாய்ப்பு உண்டு. பாடம் சார்ந்த வசன ஆதாரம் (ஆலோசனை) அளவிடப் பட்டதாயிருக்கிறபடியால் இத்துடன் ஒத்த வசனமாகிய லூக்காவில் "பெரகியாவின் குமாரன் சகரியா" எனும் சொற்றொடர் சேர்க்கப்படவில்லை (லூக்கா 11:51).*

*யொய்தாவின் குமாரனாகிய சகரியா தான் சரியெனில், பிறகு பழைய ஏற்பாடு முழுவதும் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப் பழி வேதபாரகர் மற்றும் பரிசேயருடைய தலையின் மேல் இருக்கும் என்று இயேசு சொன்னார். எபிரேய மொழித்திருமறையில், முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் (ஆபேல் கொலை செய்யப்படுவது காணப்படுகிறது) கடைசிப் புத்தகமாகிய 2 நாளாகமத்தில் (சகரியா கொலை செய்யப்படுவது குறிப்பிடப்படுகிறது). இந்த விளக்கம் "ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை" என்று ஒரு கிறிஸ்தவன் கூறுவதற்கு சமமானதாக இருக்கலாம்.*

கொல்லப்பட்ட இருவரின் விஷயத்திலும், பழி வாங்கும் சாரம்ஸம் காணுகிறது. ஏற்கனவே பார்த்தபடி, ஆபேலின் இரத்தம் பூமியிலிருந்து நீதிகோரி கூப்பிட்டது. (ஆதியாகமம் 4:10). சகரியா கல்லெறியப்பட்டு கொல்லப்பட்டபோது, அவன் சத்தமிட்டு, "கர்த்தர் பார்ப்பார், கர்த்தர் கேட்பார்!" என்றான் (2 நாளாகமம் 24:22). R. T. France "இரத்த பழியை தங்கள் தலையின் மேல் குவித்துக் கொள்வார்கள் எனும் கருத்தை இயேசு சரியான இரட்டை உதாரணங்களை தெரிவு செய்தே சொல்லியிருக்கிறார்" என்றார்.[40]

***வசனம் 36.*** *இந்த அநீதியின் நிமித்தம்* **இந்த சந்ததியின்மேல் ஆக்கினை வருமென்று** *இயேசு முன்னுரைத்தார் (11:16; 12:39, 40; 17:17ன் விளக்கவுரையைக் காண்க).* நாற்பது வருடங்களுக்குள், வெஸ்பாசியன் மற்றும் அவனுடைய குமாரனாகிய தீத்துராயன் தங்கள் படைகளுடன் எருசலேமைச் சூழ்ந்து முற்றுகையிட்டு, கடைசியில் கி, பி 70ல் பட்டணத்தை அழித்துப் போட்டார்கள்.

## எருசலேமைக் குறித்த அவரது புலம்பல் (23:37-39)

**[37]எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கொலை செய்கிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழ் கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டி சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று.**

**[38]இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்.**

**[39]கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

***வசனம் 37.*** இயேசு தமது புலம்பலை ஆச்சரியத்துடன் துவங்கி, **எருசலேமே! எருசலேமே ... !** என்றார். ஒரு வார்த்தையோ அல்லது பெயரோ மறுபடியும் திரும்பச் செல்லும் போது பெரும்பாலும் ஆழமான உணர்ச்சி வசப்படுதலை வெளிப்படுத்துகிறது (2 சாமுவேல் 18:33; 1 இராஜாக்கள் 13:2; லூக்கா 10:41; 22:31). வேறு எந்த யூதனைப் போலவே, பரிசுத்த நகரத்துடன் இயேசு ஒரு வலிவான இணக்கத்தைக் கொண்டிருந்தார். இங்கு அவர் "எருசலேம்" என்பதை உபயோகித்தது இஸ்ரவேல் முழுவதையும் அடையாளப்படுத்துவதாக காணப்படுகிறது.

கர்த்தர் தொடர்ந்து, . . . **உன்னிடத்தில் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளை கல்லெறிகிறவளே.** எருசலேமில் தேவனிடத்திலிருந்து வந்த எல்லா தீர்க்கதரிசிகளும் செய்தியாளர்களும் எருசலேமில் கொல்லப்பட்டிராவிட்டாலும், இந்தக் குற்றம் நிகழ பெரும்பாலான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. அவைகள் ஆலோசனை சங்கத்தாரிடமிருந்தோ அல்லது, யொய்தாவின் குமாரன் சகரியாவின் விஷயத்தில் உத்தரவு சிங்காசனத்திலிருந்து வந்தது போன்றோ கிரேக்க வசனப் பகுதியில், இந்த வார்த்தைகள் "கொலைசெய்தல்" மற்றும் "கல்லெறிதல்" போன்றவை நிகழ்கால வினை எச்சத்தில் மொழி பெயர்க்கப்படுகிறது,

அவை "கொலை செய்பவர்களே" "கல்லெறிகிறவர்களே" என்றும் மொழிபெயர்க்கலாம். இன்னொரு வார்த்தையில் சொன்னால், தொடர் செயலாகக் குறிப்பிடப்படுகிறது. கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியவர்கள் அஞ்சனம் பார்க்கிறவர்களும் (லேவியராகமம் 20:27), தேவ தூஷணம் சொல்லுகிறவர்களும் (லேவியராகமம் 24:16), கள்ளத் தீர்க்க தரிசிகளும் (உபாகமம் 13:1-11), விக்கிரக ஆராதனைக்காரர்களும்தான் (உபாகமம் 17:2-7). தேவனால் அனுப்பப்பட்ட விசுவாசமுள்ள மனுஷர்களும் அப்படியே நடத்தப்பட்டனர் என்பது துன்பியல் காரியமும் எதிரிடை செயலுமாகும்.

***எத்தனை தரமோ*** எனும் வார்த்தைகள் இயேசு அநேகமுறை எருசலேமில் பயணித்திருப்பதைக் காட்டுகிறது. இயேசு சிறு பிள்ளையாய் தம்முடைய பெற்றோர்களுடன் எருசலேமுக்குச் சென்ற பயணங்கள் (லூக்கா 2:22-38) பிறகு பன்னிரண்டு வயதில் (2:41-51), சென்றார் என்பதற்குப் பிறகு சுவிசேஷ ஒற்றுமை எழுத்தாளர்கள், இப்பொழுது நாம் படித்துக் கொண்டிருக்கிற பயணத்துக்கிடையில் வருகை தந்ததாகக் குறிப்பிடுவதில்லை. ஆகிலும், இயேசு தமது தனிநபர் ஊழியக்காலத்தில் $3^1/_2$ ஆண்டுகளில் அப்படிப்பட்ட பல பயணங்களைச் செய்தார் என்று யோவான் புத்தகத்திலிருந்து அறிந்து கொள்கிறோம் (யோவான் 2:13; 5:1; 7:14; 10:22, 23; 12:12). கொர்நெலியு வீட்டாருக்கு பேதுரு பிரசங்கித்த போது கூட மற்ற எருசலேம் பயணங்களைப் பற்றி குறிப்பிடுகிறார் (நடபடிகள் 10:39). இயேசு நியாயப்பிரமாணத்துக்கு பரிபூரணமாய் கீழ்ப்படிந்தபடியால், ஒவ்வொரு யூத ஆண் மகனிடத்திலும் கோரப்பட்ட பட்டணத்துக்குட்பட்ட பயணத்தூரத்தில் வருடந்தோறும் பயணித்திருக்க வேண்டும், என்பதை ஒருவர் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியின் போது இயேசு கண்ணீர் விட்டாரோ இல்லையோ (காண்க லூக்கா 19:41), அவருடைய வார்த்தைகள் ஆழமான வருத்தத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. அவர்கள் தம்மிடம் வர மனமுள்ளவர்களாயிருந்திருந்தால் யூதர்களை அவர் தமது புயங்களின் கீழ் ஒன்று சேர்த்து பாதுகாத்திருப்பார் என்று சொல்லி புலம்புகிறார், ஆனால் அவர்கள் வரவில்லை. இயேசு தம்மை, ஒரு***கோழி தன் குஞ்சுகளை*** சூறையாடுபவன் கையிலிருந்தும் கடுமையான சீதோஷ்ண நிலையிலிருந்தும் பாதுகாக்கும் பொருட்டு கூட்டிச்சேர்த்து ***தன் சிறகுகளின் கீழ்*** அடைக்கலம் கொடுப்பதுபோல, ஒப்பிடுகிறார். இதே போன்ற உருவகமாக, தேவன் இஸ்ரவேலர்களை பாதுகாத்து விடுதலையாக்குவதை ஒப்பிட்டு பழைய ஏற்பாட்டில் பேசுவதைக் காணலாம் (உபாகமம் 32:11; ரூத் 2:12; சங்கீதம் 17:8; 36:7; 57:1; 61:4; 63:7; 91:4; ஏசாயா 31:5).

உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படுவது தான் மிக வருத்தமிக்க காரியம். புறந்தள்ளும் கருத்து, இதற்கு முன்பு குறிப்பிடப்பட்ட உவமைகளிலிருந்து சொல்லப்பட்ட, தேவனுடைய ஜனங்களின் முரட்டாட்டத்தை வெளிப்படுத்துகிறது, யூதமதத்தலைவர்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்களுக்கு செவிசாய்க்காமல், கடைசியில் அவருடைய குமாரனை புறக்கணித்தார்கள் (21:34-39), அவருடைய அழைப்புத் திரும்பத் திரும்பக் கொடுக்கப்பட்டும் அவர்கள் மனதைச் செலுத்தவில்லை (22:3-6).

***வசனங்கள் 38, 39. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி***

**விடப்படும்!** என்று இயேசு, தீர்க்கதரிசனம் உரைத்தார். யூதர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை புறந்கணித்தபடியால், அவர் பாழாக்கப்படும் தண்டனையை அவர்கள் மேல் அறிவித்தார். இங்கே பேசப்படும் உரைநடை பழைய ஏற்பாட்டின் சில வசனப் பகுதிகளை நினைப்பூட்டுதலாக இருந்தன (எரேமியா 12:7; 22:5; 26:6, 9). "வீடு" என்பது ஒன்று தேவாலயத்தைக் குறித்து பேசுவதாக இருந்திருக்கக்கூடும் (1 இராஜாக்கள் 9:7, 8; ஆகாய் 1:4, 9; மத்தேயு 21:13). அல்லது எருசலேம் நகரத்தைக் குறித்துப் பேசியிருக்கலாம், பாழாக்குதல் என்பது கைவிடப்பட்டு அழிவுண்டு போதலைக் குறிக்கும். தேவன் தமது ஆலயத்தையும் தமது ஜனங்களையும் கைவிட்டு விடுவார். கி.பி. 70ல், ரோம ராணுவத்தைக் கொண்டு எருசலேமை அழிக்க விருந்தார், அதிலிருந்த தேவாலயமும், பட்டணமும் அழிவுக்குட்படும். இயேசு எங்கே நின்று கொண்டு இவைகளை முன் அறிவித்தரோ தாம் எந்த ஜனங்களுக்கு இவைகளைப் போதித்துக் கொண்டிருந்தாரோ அதே இடம் தான் அழிவுண்டு போக விருந்தது. இந்த வசனம் எருசலேமின் அழிவைக் குறித்து தனிமையில் பேசப்படும் அதிகாரம் 24ன் உரையாடலை முன் அறிவிக்கிறது.

**கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்** என்று அவர்கள் சொல்லுமளவும், அவரைக் **காண்பதில்லை** என்று இயேசு சொன்னார் (காண்க சங்கீதம் 118:26). இந்த வசனப்பகுதி பண்டிகைக்குச் சென்ற யூத ஜனக்கூட்டம் அவரைக் கனப்படுத்தும்படி எருசலேமில் வெற்றிகரமான பிரவேசத்தின் போது பயன்படுத்தப்பட்ட மேற்கோள் வசனமாகும் (காண்க 21:9 க்கான விளக்கவுரை). இந்த வாக்கியம் அவருடைய பொது ஊழியத்தை முடிவுக்கு கொண்டு வருவதுடன் அதிகாரம் 24 மற்றும் 25ல் அவரது இரண்டாம் வருகை குறித்தும் விவாதிக்கப்படுகிறது. அவ்வேளையில் அவர்கள் அவர் யார் என்பதையும் இயேசுவை ஏற்றுக் கொண்டு[41] "கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர்!" என்று அறிக்கையிடுவதையும் தவிர வேறு வழியில்லை. பவுல், "இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்" என்றும், "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும்" என்றும் எழுதினார் (பிலிப்பியர் 2:10, 11).

இயேசு பூமிக்குத் திரும்பிவருவதாக எதுவும் குறிப்பிடவில்லை. சங்கத்தாருக்கு முன்பாக அவர் பின்னர் சொல்லும் போது, அவர் "சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும்" காண்பார்கள் என்றார் (26:64). பவுல் குறிப்பிடுகையில் நீதிமான்கள், கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம், என்று சொன்னார் (1 தெசலோனிகேயர் 4:17). அவர் மீண்டும் தமது பாதங்களை பூமியின் மேல் வைப்பதில்லை, வெளிப்படுத்துபவரான யோவான் எழுதினார், "இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமேன்" (வெளிப்படுத்தின விசேஷம் 1:7).

## *தசம பாகம் செலுத்துதல் (23:23)*

*தசம பாகம் செலுத்துவது பழைய உடன்படிக்கையில் கோரப்பட்டது, ஆகிலும் புதிய உடன்படிக்கையில் அதற்கு இடமில்லை. அதன் பயன்பாடு புதிய ஏற்பாட்டில் கைப்பிடியளவான முறை குறிப்பிடப் பட்டுள்ளது. சுவிசேஷங்களில், வேதபாரகர் பரிசேயருடைய செயல்களாக மட்டுமே எப்பொழுதும் குறிப்பிடப்பட்டுள்ளது (23:23; லூக்கா 11:42; 18:12). எபிரெயரில், தசம பாகம் செலுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளைக் குறித்துப் பேசுகிறது: ஆபிரகாம் சாலேமின் ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கிற்கு தசம பாகம் செலுத்தினார், பின்னர் இஸ்ரவேலர் லேவியர்களுக்கு தசமபாகம் செலுத்தினர் (எபிரெயர் 7:4-10). தசம பாகம் செலுத்தல் முறையில், ஆசாரியத்துவம் உதவியளிக்கப்பட்டது; அது ஒரு வரிசெலுத்தல் முறையில் ஒப்பிடப்பட்டது.[42] கிறிஸ்தவர்கள் ஒருபோதும் தசமபாகம் செலுத்தக் கட்டளையிடப்படவில்லை. மாறாக, நமது வரவுக்குத் தக்கதாக நமது மனதில் நியமித்தபடி உற்சாகமாய் கொடுக்க வேண்டியவர்கள் (2 கொரிந்தியர் 9:7).*

---

குறிப்புகள்

[1]John MacArthur, Jr., *The MacArthur New Testament Commentary: Matthew 16—23* (Chicago: Moody Press, 1988), 375. [2]Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 50. [3]*காண்க* Talmud *Gittin* 52ab. [4]*காண்க Testament of Moses* 7.6. [5]Josephus *Antiquities* 14.7.2. [6]Ibid., 20.2.3, 4; Tacitus *Histories* 5.5; Horace *Satires* 1.4.142, 143. [7]*அதே போல, யூதாஸ் "கேட்டின் மகன்" என்று குறிப்பிடப்பட்டான். "தால்முத்தில் நரகத்தின் பிள்ளைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது* (Talmud *Rosh ha-Shanah* 17a). *எதிர்பதமாக சொல்லப்பட்டவர்கள் "இராஜ்யத்தின் புத்திரர்கள்" (13:38).* [8]David E. Garland, "Oaths and Swearing," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 578. [9]Josephus *Wars* 5.5.6. [10]Josephus *Antiquities* 14.4.4; 14.7.1, 2; *Against Apion* 2.7.

[11]Alan Hugh McNeile, *The Gospel According to St. Matthew* (London: Macmillan and Co., 1938), 334. [12]Donald A. Hagner, *Matthew 14—28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 669. [13]Mishnah *Shebuoth* 4.13. [14]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 269. [15]*அதற்கு மாற்றாக, லேவியர்கள், ஆசாரியர்களுக்கு பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தார்கள் (எண்ணாகமம் 18:25-32).* [16]Mishnah *Maaseroth* 4.5. [17]*மிஷீனாவின்படி, மருக்கொழுந்து தசமபாகமாக கொடுக்கப்பட வேண்டியதில்லை, ஏனெனில் அது காடுபோல் எங்கும் வளர்ந்திருந்தது.* (Mishnah *Shebiith* 9.1.) [18]*"பாரமான சுமை" என்பதற்கு இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் இதே கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (23:4).* [19]Mishnah *Aboth* 2.1; 4.2. [20]*காண்க* Talmud *Shabbath* 12a.

[21]Hagner, 670–71; R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 329. [22]Mishnah *Shabbath* 20.1, 2; Talmud *Hullin* 67a. [23]Mishnah *Kelim* 25.7, 8. *ரபீமார்கள் பாத்திரத்தின் ஒரு பகுதி சுத்தமாக்கப்படும்போது எப்படி இன்னொரு பகுதி சுத்தமாகும் என்பதில் வேறுபடுகின்றனர்.* (*Tohoroth* 8.7; *Parah* 12.8.) For more information, see Jacob

Neusner, "First Cleanse the Inside," *New Testament Studies* 22 (July 1976): 486-95. [24]Mishnah *Shekalim* 1.1; *Moed Qatan* 1.2; *Maaser Sheni* 5.1. *"கல்லறைக்கு" மாற்றுக்கருத்து* (*taphos*) *"சவங்களின் எலும்புகளை வைக்கும் பெட்டகம்" என்று குறிப்பிடலாம். காண்க* Samuel T. Lachs, "On Matthew 23:27–28," *Harvard Theological Review* 68 (July–October 1975): 385–88 *சில எலும்புக்கூடு பெட்டிகள் மிக ஐஸ்வரியமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன, அவைகள் அழகாகவுமிருந்தன, ஆனாலும் மரித்தவர்களின் மாமிசம் அழுகிப் போன பின்பு எஞ்சியிருப்பது எலும்புகள் மட்டுமே.* [25]*அது பஸ்கா பண்டிகை நேரமாக இருந்தபடியால், இந்தக் கல்லறைகள் வெள்ளையடிக்கப்பட்டு மிகச் சிறப்பாக காட்சியளித்தன. இயேசுவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் சமீபத்தில் அவைகளில் சிலவற்றைப் பார்த்திருக்கக் கூடும்.* [26]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 835. [27]Talmud *Berakoth* 28a. [28]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 654–55. *Mnēmeion என்பது ஏறத்தாழ எப்பொழுதுமே ஒரு "கல்லறையைக்" குறித்து மட்டுமே புதிய ஏற்பாட்டில் பேசும் (8:28; 27:52, 53, 60; 28:8; மாற்கு 5:2, 3; 6:29; 15:46; 16:2-8; லூக்கா 11:44; 23:55; 24:2, 9, 12, 22, 24; யோவான் 5:28; 11:17, 31, 38; 12:17; 19:41, 42; 20:1-11; நடபடிகள் 13:29).* [29]A. F. Albright and C. S. Mann, *Matthew,* The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 281–82. [30]1 Maccabees 13:27–29 (NRSV).

[31]Josephus *Antiquities* 16.7.1. *நடபடிகள் 2:29 ல் தாவீதின் கல்லறை குறிப்பிடப்பட்டுள்ளது.* [32]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 586. [33]Alexander Balmain Bruce, "The Gospel According to Matthew," in *The Expositor's Greek Testament,* vol. 1, *The Synoptic Gospels—The Gospel of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 285. [34]Hendriksen, 835. [35]*மத்தேயு 23ல், ஆலோசனை சங்கத்தைச் சார்ந்தவர்களும் ஸ்தேவானை கல்லெறிந்து கொன்ற போது அங்கே அதுவரைக்கும் வாழ்ந்தவர்களுமாகிய சிலர் காதுகள் கேட்க இயேசு அநேகமாகப் பேசியிருக்கலாம்.* [36]*நடபடிகள் 13:45, 50; 14:2, 5, 6, 19; 17:5, 13; 18:12; 19:8, 9; 20:3; 21:27; 23:12; 24:1-9; 25:2, 3; 2 கொரிந்தியர் 11:23-26.* [37]Gary M. Burge, "Zechariah," in *The International Standard Bible Encyclopedia,* 4:1182–83. [38]Josephus *Wars* 4.5.4. [39]*சிறிய தீர்க்கதரிசன ஆசிரியர் "இத்தோவின் மகனான பெராகியாவின் குமாரன் சகரியா என்றழைக்கப்பட்டார்" (சகரியா 1:1) சுருக்கமாக "இத்தோவின் குமாரன்" எனப்பட்டார்* (Ezra 6:14). [40]France, 331. [41]Hagner, 681. [42]MacArthur, 384–85.